**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.475/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-8/PW- 3 | Village: திருவிடைமருதூர் |
| Name : குருமூர்த்தி | Age :43 |
| Father's/Husband's Name :அமிர்தலிங்கம் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.02.2026**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது திருவிடைமருதூரில் வசித்து வருகிறேன். நான் திருபுவனத்தில் குரு பிரிண்டர்ஸ் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருகிறேன். கடந்த 24.06.2015 அன்று இரவு 8.30 மணியளவில் என் நண்பர் சாகுல்ஹமீது என்பவர் திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை வளையில் கச்சேரி ரோட்டில் இருசக்கர வாகனம் மோதி மீன்பாடி லாரி ஏறி சாலை விபத்தில் இறந்துவிட்டதாக கேள்வி பட்டேன். நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். பின்பு மறுநாள் காலை 5 மணியளவில் நான் சம்பவ இடம் சென்றபோது

அப்போது திருவிடைமருதூர் போலிசார் வழக்கு சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்து விசாரித்தார்கள். அதில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் **அசாஆ 2** ஆகும். என்னுடன் என் நண்பர் ஹாலிஸ் என்பவர் சாட்சியாக கையெழுத்து போட்டார். இந்த வழக்கு சம்மந்மாக போலிசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.475/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-6/PW- 2 | Village: திருபுவனம் |
| Name : இளங்கோவன் | Age :42 |
| Father's/Husband's Name :தங்கராசு | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.02.2026**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருபுவனம் பாக்காம்தோப்பில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் வருடம் ஞாபகமில்லை. திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை ரோட்டில் வெக்காளியம்மன் கோவில் அருகே சாலை விபத்தில் லாரி மோதி சாகுல்ஹமீது இறந்துவிட்டதாக கேள்விபட்டு நான் இரவு 7.45 மணியளவில் சென்று பார்த்தேன். மற்றவிவரங்கள் எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. அசா1 இந்த விபத்து சம்மந்தமாக கொடுத்த புகார்

சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கடந்த 24.06.2015ம் தேதி இரவு சுமார் 8.15 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை அருகே சென்றபோது எனக்கு முன்னால் தன்னுடைய பஜாஜ் TN49AY4437 என்ற இருசக்கர வாகனத்தில் போய்கொண்டிருந்த சாகுல்ஹமீது கச்சேரி ரோட்டில் உள்ள வேகத்தடை தாண்டி போகும்போது அவருக்கு எதிரே பல்சர் இருசக்கர வாகனத்தில் TN68P1937 என்ற இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி அய்யப்பன் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வந்து மோதியதில் சாகுல்ஹமீது கீழே விழுந்துவிட்டார் என்றும் அவருக்கு பின்னால் வந்த ஒரு ஈச்சர் மீன் லாரி சாகுல்ஹமீது மீது ஏறி இறங்கிவிட்டது என்றும் அதில் சாகுல்ஹமீது தலையிலும் உடலிலும் அடிப்பட்ட சாகுல்ஹமீது அங்கேயே இறந்துவிட்டார் என்றும் அந்த மீன் லாரியின் பதிவெண் KL25F2835 என்றும் பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்ற நாங்கள் எல்லோரும் போய் சத்தம் போட்டோம் என்றும் பின்பு இறந்துபோது சாகுல்ஹமீது உடலை திருவிடைமருதூர் அரசு மருத்துவமனையில் சவ கிடங்கில் வைத்தார்கள் என்றும் இச்சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் சொன்னால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எனக்கு ஞாபக மறதியாக இருப்பதாலும் எனக்கே தெரிந்த காரணங்களுக்காகவும் எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற

வேண்டும் என்ற நோக்கில் உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.475/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-1/PW-1 <br> Name : முமகது அணஸ் <br> Father's/Husband's Name : ரபி அகமது <br><br> Nationality : Indian | Village: வலங்கைமான் <br> Age :37 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.02.2026**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது வலக்கைமான் சேனிய தெருவில் வசித்து வருகிறேன். தற்போது வேலை நிமித்தமாக திருபுவனம் ஹாஜியார் நகரில் வசித்து வருகிறேன். நான் பில்டிங் காண்டிராக்ட்டராக வேலை செய்து வருகிறேன். நானும் எனது நண்பர் சாகுல்ஹமீது என்பவரும் கடந்த 24.06.2015 ம் தேதி இரவு எங்கள் வேலையை முடித்துவிட்டு ஆடுருறையிலுள்ள அவரது பிரஸ் நிறுவனத்திலிருந்து நாங்கள் இருவரும் தனித்தனி பைக்கில் திருபுவனம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது அப்போது இரவு 8.15 முதல் 8.30

மணியளவில் திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை அருகில் கச்சேரி ரோட்டில் வெக்காளியம்மன் கோவில் அருகே வேகத்தடை அருகே வந்து கொண்டிருந்தபோது எங்களுக் எதிரே ஆஜர் எதிரி அய்யப்பன் என்பவர் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து சாகுல்ஹமீது வாகனத்தின் மீது மோதியதால் சாகுல்ஹமீது கீழே விழுந்ததில் மீன் ஏற்றி வந்த லாரி சாகுல்ஹமீது ஏறியதால் அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் திருவிடை காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **அசாஆ 1** ஆகும். இந்த விபத்திற்கு ஆஜர் எதிரிதான் காரணம். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**